மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண்.302/2017

2026ம் ஆண்டு ஜனவரி 21ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகசுந்தரம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

21.01.2026 பி.வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கில் நான் தகப்பனராக இல்லை என்றால் சரிதான். என் தகப்பனார் தான் இந்த வழக்கில் 4ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது தகப்பனார் தனிப்பட்ட முறையில் எந்த எதிர்வாதமும் செய்யவில்லை என்றால் ஆமாம் இந்த வழக்கு விபரங்கள் அனைத்தும் 5ம் பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதற்க்காக இந்த வழக்கை வாதிதாக்கல் செய்துள்ளார் என்றால் ஏரித்தடம் அவர்களுக்கும் பாத்தியப்பட்டது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 5ம் பிரதிவாதி தரப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையை நான் படித்து தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம்.

2. இந்த வழக்கில் வாதி எந்த புல எண்ணில் ஏரித்தடம் உள்ளதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண் 45 இல்

உள்ளதாக சொல்லி உள்ளார். ரிசர்வே எண் 45 இன் பழைய 119. காலை எண்.45 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 10 ஏக்கர் 17 சென்ட் அல்லது 10 ஏக்கர் 13 சென்ட் ஆக இருக்கலாம். மேற்படி சொத்துக்கள் ஆதியில் ஒரு ராமசாமி கவுண்டர் மக்கள் ராமசாமி கவுண்டர் பழனிச்சாமி கவுண்டர் ஆறுச்சாமி கவுண்டர் மற்றும் ஒரு கோவிந்தசாமி கவுண்டர் மகன் பொன்னுசாமி கவுண்டர் ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

3. மேற்படியார்கள் கடந்த 16.05.1977 தேதியில் அந்த சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் உள்ள நபரான ராமசாமி கவுண்டர் மகன் பழனிச்சாமிகவுண்டர் தான் எனது தாத்தா என்றால் சரிதான். என் தாத்தா தற்போது உயிரோடு இல்லை என்றால் சரிதான். 1977 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை நான் படித்து பார்த்து உள்ளேனா என்றால் ஆமாம்.

4. அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை ஏ பி சி டி அட்டவணைக்களாக பிரித்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் பி அட்டவணை சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு பாகம் ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்துக்களில் கடைசியில் ஏரி தடம் மற்றும் 12 அடி அகல தடத்தை பொறுத்து குறிப்பிட்டு சொல்லி உள்ளார்கள் என்றால் சரிதான் அதேபோல்தான் மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள நான்கு அட்டவணை சொத்துக்களிலும் மேற்படி தடங்களில் உரிமை கொடுத்து எழுதி உள்ளார்கள் என்றால் சரிதான். மொத்தம் 40 சென்ட் விஸ்தீரணம் என்றால் சரிதான். அதில் நான்கு பங்குதாரர்களுக்கும்

பொதுவில் புஞ்சை ஏக்கர் 10 சென்ட் என பொதுவில் தடபாத்தியம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 1977 பாகப்பிரிவினைக்கு பின்பு அந்த தடத்தின் வழியாகத்தான் அனைத்து பங்குதாரர்களும் சென்று வந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1977 பாகப்பிரிவினையில் டி அட்டவணை சொத்தாக கோவிந்தசாமி கவுண்டர் மகன் பொன்னுச்சாமி கவுண்டர் என்பவருக்கு ஒதுக்கி இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த பொன்னுசாமி கவுண்டர் என்பவருக்கு குழந்தைகள் எதுவும் இல்லை என்றால் ஆமாம்.

6. பொன்னுசாமி கவுண்டர் இன் மனைவி பெயர் சிவகாமி அம்மாள் என்றால் சரிதான். பொன்னுசாமி கவுண்டருக்கு டி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் இறந்ததற்கு பின்பு அவரது மனைவி சிவகாமி அம்மாள் என்பவர் அனுபவம் செய்து வந்து 1987 ஆம் ஆண்டு காளியப்ப கவுண்டர் பொன்னுசாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான் மேற்படி பொன்னுசாமி என்பவரிடமிருந்து 05.11.2003 ஆம் தேதி வாதி அந்த சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் ஆமாம். கிரைய தேதியிலிருந்து நாளதுதேதி வரை வாதி தாவா தடம் வழியாக சென்று தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

7. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தைப் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான் அதில் 6 வது பத்தியில் தாவா சொத்தில் உள்ள தடபாத்தியத்தை பொதுசராவில் கண்டுள்ளது போல உரிமை கோரி வழக்கிட்டு இருப்பது தவறு என்று நான் சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 1977 பாகக்காரர்

ஆவணத்திற்கு பின்னிட்டு தாவா சொத்துக்கள் மற்றும் தாவா தடத்தை பொறுத்து வேறு ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் ஆமாம். 1977 பாகக்காரர் ஆவணத்தின் அடிப்படையில் தான் நாளது தேதி வரை அனைத்து பங்குதாரர்களும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

8. 1977 பாகக்காரர் ஆவணத்தின் அடிப்படையில் வாதி தடபாத்தியம் கோருவது சரிதான் என்றால் ஆமாம். தாவா சொத்தை முதல் முறை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது நான் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான். அந்த ஆணையர் அறிக்கையில் உள்ள விவரங்களை நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். வழக்குரை வரைபடத்தில் டி இ எஃப் ஜி என காட்டப்பட்டுள்ள கிழமேல் ஏரித்தடம் முழுவதும் ரீசர்வே எண்.47/1ல் அமைந்துள்ளதாக நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

9. 40 சென்ட் விஸ்தீரணம் உள்ள பூமியை நாங்கள் மட்டும் பயன்படுத்தும் வகையில் ஏரி அமைத்து தண்ணீர் தேக்கி விவசாய காரியங்கள் செய்து வருவதாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் இல்லை அவ்வாறு சொல்லவில்லை. அதில் அவ்வாறு சொல்லி இருந்தால் தவறு என்றால் சரிதான். இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குறையை எனது தகப்பனார் ஏற்றுக் கொண்டுதான் இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் ஆமாம். அந்த எதிர் வழக்குரையோடு ஒரு வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. என்னிடம் காட்டப்படும் மேற்படி வரைபடத்தில்கண்டுள்ளவாறு தான் பூஸ்துதியில் அமைப்புகள் உள்ளதா என்றால் இந்த வரைபடத்தில் உள்ளவாறு தான் புல எண்.47 நிலையில் உள்ளது மேற்படி வரைபடத்தில் புல எண்.47 இல் ஏரி உள்ளதாகவோ அல்லது தடம் உள்ளதாகவோ குறிப்பிட்ட எதுவும் காட்டப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி வரைபடத்தில் எந்த இடத்திலும் தடம் என்றோ, ஏரி என்றோ குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை நிரூபன வாக்கு மூலத்தில் தாவா சொத்தை அளவீடு செய்ய மனு தாக்கல் செய்து நீதிமன்றம் உத்தரவிட்டும் வாதிதான் அளக்க முயற்சி எதுவும் எடுக்காமல் இருந்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். தாவா சொத்தை அளவீடு செய்ய மனுவானது என் தகப்பனார் தரப்பில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

11. அந்த மனுவிற்கு ஆட்சேபனை இல்லை என வாதி தரப்பில் மனு தாக்கல் செய்த தேதியிலேயே மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆணையர் 09.08.2025 தேதியில்தான் தாவா சொத்தை அளவீடு செய்யப் போவதாக அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். என் தகப்பனார் தரப்பில் தான் தாவா சொத்தை அளவீடு செய்ய ஏழு ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு வாதி நடவடிக்கை எடுக்கவில்லை என வாதி மீது தவறாக எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

12. தாவா சொத்தை அளவிடு செய்தால் ஏறித்தடம் புல எண்.45ல் உள்ள விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் நாங்கள் காலம் கடத்தி

வந்தோம் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை இரண்டாவது முறை அளவீடு செய்த போது நான் உடன் இருந்தேன் என்றால் ஆமாம் பின்னிட்டு ஆணையர் அறிக்கையில் கண்டு விவரங்களை நான் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். அதன் பேரில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் ஆமாம்.

13. 1977 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு தாவா தடம் முழுவதும் 45 ஆம் எண் காலையில் தான் உள்ளது என்றும் வாதி வெளியில் இருந்து வந்து சொத்தை கிரயம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும் வாதிக்கு இடைஞ்சல் செய்து அவரிடமிருந்து சொத்தை திரும்பி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிக்கு தடபாத்தியம் இல்லை என்றும் எங்களுக்கு தனித்து பாத்தியப்பட்ட பூமியில் தடம் இருப்பதாக நாங்கள் பொய்யாக இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரி உள்ளபடி இந்த வழக்கு தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.21 18:24:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்